நிலங்களைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியை வைத்துக்கொண்டு கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

35—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

***35153—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது பற்றி தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி காத்து, தமிழ் இனம் காத்து, தமிழர்தம் உரிமைகளைக் காத்து நிற்கும் தமிழர் குல தெய்வம், உலகத் தமிழர்களுடைய ஒப்பற்ற தலைவர், சூழ்ச்சிகளைச் சிதறடிக்கும் சிங்க நிகர் தலைவி, 24-2-2015 அன்று 67-வது பிறந்த நாள் காணும்

மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்மலர்ப் பாதங்களைத் தொட்டு பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

11-2-2015 முதல் 14-2-2015 வரை கோவாவில் நடைபெற்ற Fifth India Region Commonwealth Parliamentary Association Conference-ல் எளிய தொண்டனாகிய என்னைக் கலந்துகொள்வதற்கு அனுமதி அளித்து, உரையாற்றுவதற்கு உயர்ந்ததோர் வாய்ப்பினை வழங்கிய எங்கள் குடும்ப தெய்வம், கழகக் காவல் தெய்வம், இதய தெய்வம், மாண்புமிகு மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவிகளின் நலன் கருதி, எதிர்காலத்திலாவது அங்கு ஓர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரினை நோக்கி உயர் கல்வி நிலை என்று இருந்த நிலையை மாற்றி, கிராமங்களை நோக்கி உயர் கல்வி என்கிற நிலையை உருவாக்கித் தந்த பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டும்தான் உண்டு. அந்த வகையிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 76 அரசுக் கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 139 கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் 448, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் 37 உள்ளன. ஆக மொத்தம் தமிழகத்தில் 700 கல்லூரிகள் இருக்கின்றன. 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதல்வராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின்பு, 62 அரசுக் கல்லூரிகள் மட்டும்தான் இருந்தன. ஆனால், கூடுதலாக அரசியல் வரலாற்றில்

2015 பிப்ரவரி 20]

இதுவரை இல்லாத அளவிற்கு 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அதிகமாக உருவாக்கித் தந்து, இன்றைக்கு 76 கல்லூரிகளாக உயர்ந்திருக்கின்றன. அந்த வகையில், மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நோக்கமே கிராமப்புறங்களில் ஏழை எளியவர்கள், பொருளாதாரத்தில் ஒடுக்கப்பட்டவர்கள், வறியவர்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும் என்பதுதான். அந்த வகையிலேதான் ஆரம்பிக்கப்பட்ட 38 கல்லூரிகளையும், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள் பயன்பெறுகிற வகையில், ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறுகிற வகையில், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்ற நோக்கத்தோடு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப மகளிர் கல்லூரிகள் தொடங்குவது பற்றி அரசு சிந்தித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக விளங்குகிற மாட்சிமை பொருந்திய மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் கல்வித் துறையில் மகத்தான புரட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், காட்டுமன்னார்கோவில் தொகுதியின் ஏழை எளிய மாணவிகளுடைய நலன் கருதி, எதிர்காலத்தில் சிந்திக்கப்படும் என்ற நல்ல செய்தியைச் சொன்ன மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், என் தொகுதி மாணவிகளின் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

முற்பகல் 10-30

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உயர் கல்வி பெறுபவர்களுடைய

எண்ணிக்கையை அதிகரிக்கும்பொருட்டு இன்றைய அரசு எடுத்து வரக்கூடிய நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். தமிழகத்தில் அரசினுடைய நேரடி செயல்பாட்டில் இயங்கக்கூடிய கல்லூரிகள் தவிர்த்து அரசு உதவிபெறக்கூடிய கல்லூரிகள் பல இருக்கின்றன. 1982 ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கோவையில் C.B.M. என்ற ஒரு தனியார் கல்வி நிறுவனத்திற்கு அரசு உதவி பெறக்கூடிய கல்லூரியை நிறுவ அந்தஸ்து வழங்கப்பட்டது. அப்போது 30 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து மீண்டும் 35 ஏக்கர் நிலத்தினை, அதாவது 65 ஏக்கர் நிலத்தினை அரசு ஒட்டுமொத்தமாக வழங்கியது. ஆனால், அந்த நிருவாகம் தற்போது செயலிழந்து அங்கே மாணவர்கள் சரியாக எந்தவிதமான வசதியும் பெற முடியவில்லை என்று கூறி அரசே அந்தக் கல்லூரியினை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கடந்த ஓராண்டு காலமாக மாணவர்கள் போராடி வருகிறார்கள். எனவே, அந்த மாணவர்களுடைய கோரிக்கையினைப் பரிசீலனை செய்து அங்கு இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்கி அந்தக் கல்லூரியினை செவ்வனே நடத்துவதற்கும் அல்லது அரசே அந்தக் கல்லூரியினை எடுத்து நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்தும் அறிய விரும்புகிறேன்.

அதுபோல், ஸ்ரீவைகுண்டத்தில் குமரகுரு என்ற ஒரு கல்லூரி இருக்கின்றது. அதிலும் பல குறைகள் இருக்கின்றன, எனவே அந்தக் கல்லூரியினையும் அரசு எடுத்து நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசினுடைய உதவி பெறக்கூடிய பி.ஏ.ஜி. தியாகராஜர் கல்லூரியில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதில் குறைபாடு இருக்கின்றது. எனவே, இதனைக் களைந்து உயர் கல்வியை மீண்டும் அனைவருக்கும் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்க இந்த அரசு முன்வருமா என்றும், இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அண்ணாமலை பல்கலைக்கழகம்

என்ற அரசு உதவிபெறுகிற தனியார் பல்கலைக்கழகம் ஒன்று இருந்தது. அந்தப் பல்கலைக்கழகத்தை நீண்ட காலமாக அரசு பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும் என்று மக்களுடைய கோரிக்கை இருந்தது. அந்தவகையில் அந்தப் பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் ஆகியோர் பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டதால் அதனை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று அங்கு இருக்கக்கூடிய பேராசிரியப் பெருமக்கள், மாணவ, மாணவிகள் எல்லாம் நீண்டகாலமாகப் போராடி வந்தார்கள். ஆனால், தமிழகத்தில் எத்தனையோ அரசு அமைந்த பின்பும் அதற்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்களே தவிர அதனை நிறைவேற்றவில்லை. ஆனால் அப்பேர்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க, சுதந்திரத்திற்கு முன்பே துவங்கப்பட்ட அந்தப் பல்கலைக்கழகத்தினை மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, அவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அதனை அரசு பல்கலைக்கழகமாக மாற்றிய பெருமை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் தாங்கள் சொல்கின்ற கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய C.B.M. கல்லூரி உட்பட, தமிழகத்தில் 139 அரசு உதவிபெறும் கல்லூரிகள் இருக்கின்றன. 139 அரசு உதவிபெறும் கல்லூரிகள். அவை Trust நடத்தக்கூடிய கல்லூரிகள். அந்தக் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்பதுதான் மாணவர்களுடைய கோரிக்கை. அங்கே சமீபகாலமாக போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தற்போது சுமுகமாக கல்லூரி நடைபெற்று வருகின்றது. அதைப்போல, இன்றைக்கு ஈரோட்டில் உள்ளதை அரசுக் கல்லூரியாக மாற்ற வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றன. அது அரசினுடைய கொள்கை முடிவு. ஆகவே, அதுபோன்ற கல்லூரிகளில் எதிர்காலத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் மாணவர்களுக்குக் கல்வி பாதிக்கப்படுகின்றபோது அங்கு இருக்கக்கூடிய பணியாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றபோது, அதுபோன்ற ஒரு நிலை வருகின்றபோது அதில் அரசு சிந்தித்து முடிவு எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல் ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு கல்லூரி இருப்பதாகச் சொன்னார்கள். அதுபோன்ற ஒரு பிரச்சினை அரசின் கவனத்திற்கு இதுவரையிலும் வரவில்லை.

அதுபோன்ற ஒரு கருத்து வருகின்றபோது அதுகுறித்து அரசு சிந்தித்து முடிவெடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பெண் கல்வியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை இந்திய அளவில் முதன்மையில் இருக்கிறது என்று பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு விஷன் 2023 - தொலைநோக்கு ஆவணம் 2023 என்ற ஒரு அற்புதமானத் திட்டத்தினை அறிவித்து அதிலே பத்து முக்கிய அம்சங்களை முக்கியக் கொள்கையாக வைத்து, அதிலே கல்வித் துறையினையும் ஒரு முக்கிய அம்சமாக வைத்து திட்டத்தினை வெளியிட்டார்கள். அந்தத் திட்டத்திலே உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை விகிதத்தினை உயர்த்த வேண்டும் என்பதுதான் அம்மா அவர்களுடைய நோக்கம். அன்றைக்கு, 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது தமிழகத்தில் 18 சதவிகிதமாக இருந்தது. இந்தியாவைப் பொறுத்தவரையில் 15 சதவிகிதமாக இருந்தது. அம்மா அவர்களின் நோக்கமே உலக அளவில் இருக்கக்கூடிய 23 சதவிகிதத்தினைக் கடந்திருக்க வேண்டும் என்பதுதான். அந்தவகையில் அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய பல அற்புதமான திட்டங்கள் காரணமாக 2011-ல் 18 சதவிகிதமாக இருந்த உயர் கல்வியின் எண்ணிக்கை இன்றைக்கு 42 சதவிகிதமாக உயர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை விகிதத்தைத் தமிழகம்தான் முதன்மை இடத்தை, முன்னணி மாநிலமாக வைத்துக்கொண்டிருக்கின்றது என்பதை நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வாய்ப்புத் தருகிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு) தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நேரத்தினைப் பாருங்கள். (குறுக்கீடு) இப்போதுதான் ஆறாவது கேள்விக்குச் செல்கிறேன். இன்றைக்கு விவாதத்தில் 13 பேர் பேச வேண்டியுள்ளது. (குறுக்கீடு) இன்று 13 பேர் பேச வேண்டியுள்ளது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ரெங்கராஜன், உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அடுத்து வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

2015 பிப்ரவரி 20]

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. என்.ஆர். ரெங்கராஜன் மற்றும் திரு. எஸ். ஜான் ஜேக்கப் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

36—

கூட்டுறவுக் கடன் சங்கம்

***37790—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டம், செம்போடை கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காக நான் என்று வாழ்ந்து வரும் இந்தியப் பெருநாட்டில் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, நான் விடையினை அளிக்கிறேன்.

முற்பகல் 10-35

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியில் செயல்பட்டு வந்த செம்போடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல் இழந்த நிலையில் 8-10-1999 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது. இருப்பினும், இப்பகுதி மக்களுக்குத் தேவையான பயிர்க் கடன் உள்ளிட்ட அனைத்து அரசு சலுகைகளும், அருகில் உள்ள கத்திரிபுலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், புதியதாக ஒரு தொடக்க வேளாண்மைக்